**மொரவெவ பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 17 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மொரவெவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 736,031 ஆன போதிலும், அது ரூபா 1,329,275 ஆக கணக்குகளுக்கு எடுக்கப்படாமையால் நடப்பாண்டின் வருமானம் ரூபா 593,224 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முற்பணக் கணக்கின் மீதியானது ரூபா 2,000,000 ஆன போதிலும், ஐந்தொகையில் முற்பணங்களாக ரூபா 1,891,984 காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சபையினால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 185,600 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் ரூபா 55,450 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் மற்றும் ரூபா 4,203 பெறுமதியான வாசிகசாலை புத்தகங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபைகளை பலப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹதிவுல்வெவ நீர் விநியோக அபிவிருத்திக்காக உள்ளூராட்சி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணமான ரூபா 496,690 தொகை வாடகை வருமானத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) புரநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்குரியதாக உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து கிடைத்த பிடிகாசான ரூபா 391,150 வைப்புப் பெறுவனவுகளின் கீழ் கணக்கு வைப்பதற்குப் பதிலாக சேவைக் கட்டண வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் பெற வேண்டிய ஊழியர் கடன், கடன் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 1,393,590 ஆன போதிலும், பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம், அது ரூபா 1,117,863 ஆக காணப்பட்டமையால் ரூபா 275,727 ஆன வேறுபாடொன்று நிலவியது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள், வைப்புப் பேரேட்டின் பிரகாரம் ரூபா 2,517,442 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 2,787,183 ஆனமையால் ரூபா 269,741 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.3 தொங்கல் கணக்குகள்**

2011 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 7,864,759 ஆன தொங்கல் கணக்கின் செலவு மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ஐந்தொகையில் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 950,530 தொகையான பெற வேண்டிய மீதி மற்றும் ரூபா 214,316 தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (ஆ) | 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோவை | |
| (i) | 13 ஆம் விதி | வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் பாதீட்டில் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 17 ஆம் விதி | பற்றுச்சீட்டுக்கள் தொடர்பில் திட்டவட்டமான மாதிரிப் படிவத்தில் காண்பிக்கப்படும் அடியிதழ்சேர் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 76 ஆம் விதி | சபையினால் வாடகைக்கு வழங்கப்படும் கடன் தொடர்பில் வாடகைப் பேரேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | 143 ஆம் விதி | மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்கள், பிடிகாசு, வாசிகசாலை வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்களுக்காக தனித்தனியாக வைப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 217 ஆம் விதி | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) | நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களைக் கடந்த ரூபா 59,956 தொகையான மீளச் செலுத்த வேண்டிய 09 வைப்புக்களை தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 1646 | பயணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதிகளுடன் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,657,153 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,801,448 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான மூலம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 |
| வீதவரியும் வரியும் | 62 | - | - | - | 47 | 53 | 53 | - |
| வாடகை | 4,705 | 2,687 | 2,615 | 72 | 2,785 | 4,596 | 4,596 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 251 | 219 | 219 | - | 303 | 208 | 208 | - |
| ஏனைய வருமானம் | 3,005 | 1,494 | 1,494 | - | 3,010 | 1,469 | 1,469 | - |

### 2.2.2 முத்திரைக் கட்டணம்

கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான முத்திரைக் கட்டணமாக பெறவேண்டிய தொகைகளை இனங்காணுவதற்கு மற்றும் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்தல், மக்களின் சுகவாழ்வு, வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகளை விதிக்க வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

2017 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் மட்டத்தினை அடையாமை

விபரங்கள் பின்வருமாறு.

(i) புரநெகும செயற்திட்டத்தின் கீழ் மஹாதிவுல் வெவ மக்களின் தேவைப்பாடொன்றான தாய் சேய் பினியாய்வு நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்காக ரூபா 3,852,984 ஆன தொகை செலவிடப்பட்டு 2017 சனவரி 01 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்ட கட்டிடத்திற்காக மின்சார விடுதியை பெற்றுக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படாமையால்,

மக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட சேவைகளை வழங்குவதற்கு 2018 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) புரநெகும செயற்திட்டத்தின் கீழ் வாடகைக்கு வழங்குவதற்கு ரூபா 1,521,904 தொகையான செலவினத்தில் மஹாதிபுல்வெவ கடைகள் இரண்டு 2016 நவம்பர் 08 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், இதில் சுமார் 250,000 அளவான செலவினம் மேற்கொள்ளப்பட்டு இரண்டு குளியலறைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான நீர் வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2018 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் அதனை பயன்படுத்த முடியாததாக காணப்பட்டது.

**(ஈ) கைவிடப்பட்ட பணிகள்**

--------------------------------------

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் மாகாண சபைகள் பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் - 2017 இன் கீழ் மஹாதிவுல்வெவ பிரசேதத்தின் மக்களின் தேவைப்பாடொன்றான வாரச்சந்தையை நிர்மாணிப்பதற்கு 2017 ஒக்தோபர் 06 ஆந் திகதி சமூக அமைப்பொன்றிற்கு ரூபா 1,000,000 பெறுமதிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. சமூக அமைப்பினால் மூலப்பொருட்களின் விலை உயர்வானது என்பதனால் உரிய நிர்மாணத்தை மேற்கொள்ள முடியாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதனை உறுதிப்படுத்த முறையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சபையினால் மீண்டும் இந்த ஒப்பந்தம் மற்றுமொரு சங்கத்திற்கு அல்லது ஒப்பந்தகாரரிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இந்த பிரசேதத்தில் மக்களின் தேவைப்பாடொன்றான வாரச் சந்தையை நிர்மாணிக்கும் பணி 2018 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிம் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(உ) சுற்றாடல் பிரச்சினைகள்**

------------------------------------------

**சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வெளியிடல்**

------------------------------------------------------------------------------

1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 ''அ'' பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அழிவு ஏற்படும் அரிசி ஆலைகள், தச்சு கைத்தொழில், கராஜ் மற்றும் சீமெந்துடன் தொடர்புடைய உற்பத்தி நிறுவனங்கள் போன்ற முயற்சிகள் நடைமுறைப்படுத்தும் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும் அவ்வாறான 16 முயற்சிகள் அவ்வாறான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளாது தொழிற்சாலை நடாத்திச் செல்லப்பட்டவாறு இருந்தது. இது தொடர்பில் ஏற்படக்கூடிய சூற்றாடல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

-------------------------------------------------------------------

சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளாக சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன், குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான வேலைத்திட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அளவீடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

-----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான ஓட்டத்திலுள்ள 02 வாகனங்களுக்காக நடப்பாண்டிற்காக வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) JCB இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து 60 மாதத் தவணைகளில் செலுத்தி தீர்ப்பதற்கு 2013 மே மாதம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 9,520,000 ஆன கடன் தொகைக்காக 2015 நவம்பர் மாதம் முதல் 2017 திசெம்பர் மாதம் வரையிலும் செலுத்த வேண்டிய ரூபா 4,481,789 தொகையான கடன் தவணைப் பணம் மற்றும் ரூபா 656,318 தொகையான வட்டித் தொகையை செலுத்துவதற்கு 2018 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் ரூபா 1,500,000 தொகையான பணம் 8.75 சதவீதமான வட்டி வீதத்தின் கீழ் 2015 திசெம்பர் 09 ஆந் திகதி 05 வருடங்களில் முதிர்வடையும் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், முதிர்வின் போது ரூபா 656,250 தொகையான வட்டி வருமானமொன்று பெற வேண்டியதாக இருந்தது. எனினும் குறுங்காலத்தில் முதிர்வடையும் காலத்துடனான முதலீடுகளின் வட்டி வீதம் பொதுவாக சுமார் 11 சதவீதமாக உள்ளமையால், அதற்கமைய, சபை குறுங்கால நிலையான வைப்பொன்றில் பணம் முதலீடு செய்யப்பட்டிருப்பின், 05 வருடங்களின் இறுதியில் கிட்டிய அளவில் ரூபா 825,000 அளவான வருமானமொன்றினை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

----------------------------------------------

விபரங்கள் பின்வருமாறு.

(அ) சேவையை கைவிட்டுச் சென்ற ஐந்து உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழிய கடன் ரூபா 100,145 தொகை தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2018 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச சேவைகள் நலன்புரி நிதியத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்துதல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஓய்வூதிய திணைக்களத்தின் 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய 02/2011 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் பதலீட்டு அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட இரு ஊழியர்களிடமிருந்து அறவிடப்படும் பங்களிப்பு தொகைகள் அரச சேவைகள் நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஊழியர் மற்றும் தொழில்தருநரின் பங்களிப்பு தொகை ரூபா 40,617 இனால் குறைத்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ii) 2015 யூலை 23 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர்களின் மொத்த மாதாந்த ஈட்டங்களின் பங்களிப்புத் தொகை 20% ஆன போதிலும், பதிலீட்டு அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட இரு ஊழியர்களிடமிருந்து 2017 ஆம் ஆண்டின் பங்களிப்பு பணம் அடிப்படை சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஊழியரின்

மற்றும் தொழில்தருநரின் பங்களிப்பு தொகை ரூபா 40,617 இனால் குறைத்து கணிப்பிடப்பட்டிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

உள்ளூராட்சி நிறுவனங்களின் பராமரிப்பு அலகிற்கு தேவையான ஆதார இயந்திரங்கள் மற்றும் பொறிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் போக்குவரத்து வசதிகளை ஒழுங்குபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி அமைச்சினால் சபைக்கு வழங்கிய லொறி மற்றும் மோட்டார் வண்டியின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

மீளாய்வாண்டிற்காக 2018 மார்ச் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் பழுதுபார்க்கப்பட வேண்டிய, அழிக்கப்பட வேண்டிய மற்றும் விற்பனை செய்ய வேண்டிய பொருட்கள் தொடர்பில் மெய்மையாய்வு சபையினால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் 2018 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சபையினால் மோட்டார் வாகனங்களுக்கான வருமான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் போது, அது உரிய காலப்பகுதியினுள் இடம்பெறாமையால் ரூபா 7,700 ஆன தண்டப் பணமொன்று செலுத்தப்பட்டிருந்தது.

### 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதேச சபைகளை பலப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் - 2017 இன் நிதியேற்பாடுகளின் கீழ் பல்நோக்கு கட்டிடத்தினை அபிவிருத்தி செய்தல் 01 இலக்கமாக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,900,000 ஆன ஒப்பந்தமொன்று சமூக அமைப்பொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், இந்த கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் கட்டிடங்கள் பிரமாணத்தின் பிரகாரம் அனுமதியினை பெற்றிருக்கவில்லை. அவ்வாறே முதலாம் தளத்தின் கொங்கிறீட் இடல், சுவர்களுக்கு சுண்ணம் வைத்தல் மற்றும் உட்புற சுவர்களுக்கு வெள்ளையடிப்பதற்காக ரூபா 75,375 ஆன தொகை கூடுதலாக செலுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்தின் பணிகள் 2018 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் - 2017 இன் நிதியேற்பாட்டின் கீழ் மொராவெவ பல்நோக்கு

கட்டிட பூமியினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,675,000 ஆன பெறுமதியுடைய செயற்திட்டமொன்று 2017 ஒக்தோபர் 06 ஆந் திகதி சமூக அமைப்பொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரதான பணியொன்றான அச்சுக்கற்கள் பதிக்கும் போது அவற்றின் நியமத்தினை பரீட்சிக்க வேண்டும். எனினும் சபையினால் நியமத்தினை பரீட்சிக்காது அச்சுக்கற்களை பதிப்பதற்காக ரூபா 1,145,285 இனை செலுத்துவதற்கு சான்றுப்படுத்தி பட்டியல்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

(இ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் பிரதேச சபைகளை பலப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் - 2017 நிதியேற்பாட்டின் கீழ் பல்நோக்கு கட்டிடத்தின் உட்புறத்தினை அபிவிருத்தி செய்யும் பணியை மேற்கொள்வதற்காக ரூபா 1,450,000 பெறுமதியான ஒப்பந்தமொன்று 2017 ஒக்தோபர் 06 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்ததுடன், இதன் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.6 ஆம் பந்தியின் பிரகாரம் அமைப்புக் குறியீடுகளை தயாரித்து பொருட்கள் அல்லது பணிகளின் பெறுகையின் போது அமைப்புக் குறியீடுகளை தயாரிக்காது மின்பிறப்பாக்கி இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மின்பிறப்பாக்கிகளுக்காக ரூபா 775,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், சந்தையில் அந்த ரகத்திலான மின் பிறப்பாக்கியொன்றின் விலை ரூபா 690,000 ஆனதுடன் கொள்வனவு பட்டியல்களை பரிசோதிக்காது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமையால் ரூபா 85,000 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் மின்பிறப்பாக்கியை கொள்வனவு செய்த திகதி முதல் அதாவது 2017 நவம்பர் 10 ஆந் திகதி முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஈ) பிரதேச சபையினால் 2016 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி நிதியத்தின் கீழ் மொறாவெவ தெற்கு டீ.01 கிராம வீதியின் சுமார் 300 மீட்டர்கள் அளவான பகுதியானது கொங்கிறீட் இடுவதற்காக ரூபா 3,711,472 ஆன பெறுமதிக்கு 2016 நவம்பர் 15 ஆந் திகதி ஒப்பந்மொன்று கையளிக்கப்பட்டிருந்ததுடன், இந்த வீதி உரிய முறையில் இடப்பட்டிருந்தால், கொங்கிறீட் இட்ட 300m அளவிற்காக இரு வடிகாண்கள் இடப்பட் வேண்டியதாக இருந்தது. எவ்வாறெனினும், சபையினால் உரிய முறையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையால் வடிகாண்கள் நிர்மாணிக்கப்படாது இரு பிரிவுகளாக கொங்கிறீட் இடப்பட்டமையால் மழை நாட்களில் வீதிக்கு குறுக்காக நீர் வழிந்தோடுவதால் இந்த பாதையில் பயணிப்பதற்கு தடையொன்றாக அமைந்திருந்தது. அவ்வாறே இந்த வீதியில் சுமார் ஒரு கிலோ மீட்டர் அளவானது பயணம் செய்ய முடியாத நிலையில் காணப்பட்டதுடன், அவற்றுள் 300 மீட்டர்கள் மாத்திரம் சபையினால் கொங்கிறீட் இடப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய அளவிற்காக உரிய வீதி வசதிகள் ஒழுங்கமைக்கப்படவில்லையாயின் இந்த வீதியை பயன்படுத்த முடியாதென அவதானிக்கப்பட்டது.

(உ) 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ii இன் பிரகாரம் சமூக அமைப்புக்களுக்கு பிணை முறியொன்று இல்லாது ரூபா 200,000 உச்ச தொகைக்கு உள்ளடங்கலாக முற்பணத் தொகையை செலுத்த முடியும் எனினும் சபையினால் பிணைமுறியொன்றை பெற்றுக்கொள்ளாது சமூக அமைப்புக்களுக்கு ரூபா 200,000 இனை மிகைத்து முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த 04 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறே 2013 யூலை 26 ஆந் திகதிய FC/3/3/2013 ஆம் இலக்க நிதி ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட சமூக அடிப்படை அமைப்பொன்றிற்காக வழங்கப்படக் கூடிய அதிஉச்ச ஒப்பந்த பெறுமதி ரூபா 02 மில்லியன் ஆகும். எனினும், சபையினால் இருப சமூக அமைப்புக்களுக்கு ரூபா 04 மில்லியன் கூட்டுத்தொகையை விஞ்சி 03 ஒப்பந்தங்கள் படி கையளிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பிரதேச சபையினால் புரநெகும செயற்திட்டத்தின் கீழ் பல்நோக்கு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2016 ஏப்ரல் 11 ஆந் திகதி ரூபா 8,401,836 ஆன ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்தின் பணிகள் 2016 செப்தெம்பர் 12 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட வேண்டும். எனினும், ஒப்பந்தத்தின் பணிகள் 2016 நவம்பர் 30 ஆந் திகதியே நிறைவு செய்யப்பட்டிருந்தமையால், அதற்கமைய அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமான ரூபா 327,617 ஆன தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) புர நெகும செயற்திட்டத்தின் கீழ் மயில்குடா வாவியின் பிரதான வீதிக்கு கொங்கிறீட் இடல் இரண்டாம் கட்டத்திற்காக ரூபா 4,000,280 பெறுமதியான ஒப்பந்த உடன்படிக்கையொன்று 2016 யூலை 08 ஆந் திகதி கையொப்பிடப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்தின் பணிகள் 2016 ஒக்தோபர் 08 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட வேண்டும். எனினும், நிறைவு செய்யப்பட்டிருந்தது. 2017 சனவரி 01 ஆந் திகதிய என்பதால் ஒப்பந்த உடன்படிக்கையின் 6.4 இன் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 168,012 ஆகும். எனினும், ரூபா 60,004 மாத்திரம் கழிக்கப்பட்டமையால் குறைவாக கழிக்கப்பட்ட தாமதக் கட்டணம் ரூபா 108,008 ஆகும்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 6 சதவீதம் முதல் 299 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் நிலவின. அதற்கமைய வருடாந்த பாதீடானது சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) வருமானத்தை கணக்கு வைத்தல்.<br>(ii) பயன்பாட்டு பேரேடுகள் பேணப்பட்டிராமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானம் அறவிடப்படாமை.<br>(ii) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை பெற்றுக்கொள்ளாமை. |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | உடன்படிக்கை காலத்தினுள் ஒப்பந்தங்களை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) மனிதவள முகாமைத்துவம் | (i) ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br>(ii) பணி பகிர்ந்தளித்தல் உரிய முறையில் மேற்கொள்ளல். |